**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.25/2024** |
| Sessions | : | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : **P.W. 9** |
| | Defence | : **D.W.** |
| | Court | : **C.W.** |

| **Name :** | தங்கம்மாள் | **S/o.(or)W/o. :** | நல்லதம்பி |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **26.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம் வடகராம்பூண்டியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் 16 சென்ட் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. அதனை மனதில்வைத்துக்கொண்டு என் கணவரை எப்படியாவது அடிக்க வேண்டும் என்று திட்டம்போட்டு சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் என் கணவர் வயலுக்கு தண்ணீர் காட்டிவிட்டு திரும்ப வரும்போது ஆற்றங்கரை அருகே வைத்து ஆஜர் எதிரிகளும், செல்லதுரையும் சேர்ந்து கட்டையாலும், கம்பியாலும்அடித்து விட்டதாக சொன்னார்கள். நான் அழுதுக்கொண்டே போனபோது எதிரே வந்த ஒரு முஸ்லீம் நபர் என்னை வண்டியில் ஏற்றிக்கொண்டு விட்டார். நான் போய் பார்த்தபோது அடிப்பட்டு குப்பறகிடந்தார். பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வர நேரமானதால் கிராமத்திலிருந்து வேறு ஒரு வாகனத்தில் வைத்து வி.களத்தூர் காவல்நிலையத்திற்கு போனோம். அங்கு

அதிகாரிகள் யாரும் இல்லாததால் பிறகு மருத்துவமனைக்கு கொண்டு போனோம். மாலை 6 மணியளவில் போலீசார் வந்து விசாரித்தார்கள். புகாரை எழுதி கையெழுத்து வாங்கினார்கள். 1 1/2 நாள் நாங்கள் அரசு மருத்துவமனையில் இருந்தோம் என் கணவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னதால் அங்கிருந்து விடுவிப்பு பெற்று மது தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அந்த மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடைபெற்றது. ஆய்வாளர் சுமதி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு 5, 6 நபர்கள் சொன்னார்கள். என் கணவர் ஏற்றிச்சென்ற வாகனத்தின் பெயரும், ஓட்டுநர் பெயரும் தெரியாது. நாங்கள் வி.களத்தூர் காவல்நிலையம் போனபோது ஒரே ஒரு போலீசார் தான் இருந்தார். வாசலில் தான் ஒரு போலீசார் இருந்தார். சீருடை அணிந்து தான் இருந்தார். போலீசார் என் கணவரிடம் ஒருதாளில் தான் கையெழுத்து வாங்கினார்கள் எழுதியதை வாசித்து காட்டினார்கள். என் கணவருக்கு 2 மணி நேரம் கழித்துதான் சுயநினைவு வந்தது. போலீசார் வந்து விசாரித்த போது நல்ல நினைவுடன் தான் இருந்தார். போலீசார் மாலை 6 மணிக்கு தான் வந்தார்கள். என் கணவர் கல்யாணசுந்தரத்தின் பெயரில் ஒரு சிவில் வழக்கு திட்டக்குடி நீதிமன்றத்தில் போட்டுள்ளது எனக்கு தெரியும். சம்பவம் நடந்து 3 மாதம் கழித்து போலீசார் விசாரித்தார்கள். விசாரித்த போலீசார் யார் என்று எனக்கு தெரியாது. எங்களுக்கும் கல்யாணசுந்திரத்திற்கம் பல ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை. என் கணவரை அடித்ததாக யாரும் என்னிடம் சொல்லவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.